**செய்தி வெளியீடு எண்: 263** **நாள்: 24.04.2019**

**தமிழகத்தில் வாக்கு எண்ணிக்கை முன்னேற்பாடுகள் குறித்து, தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாகு இ.ஆ.ப., காணொலி காட்சி மூலம் ஆய்வு**

•••••

தமிழகத்தில் கடந்த 18.04.2019அன்று நாடாளுமன்றத் தேர்தலும் 18 தொகுதிகளுக்கு சட்டமன்ற இடைத்தேர்தலும் நடைபெற்றது.

மேற்காணும் தேர்தல்களின் வாக்கு எண்ணிக்கை 23.05.2019 அன்று நடைபெறவுள்ளது.

இந்நிலையில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரதசாகு இ.ஆ.ப மற்றும் காவல்துறை இயக்குநர் (தேர்தல்) திரு. அசுதோஷ் சுக்லா இ.கா.ப. ஆகியோர் அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகள், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள் ஆகியோருடன் வாக்கு எண்ணிக்கை முன்னேற்பாடுகள் குறித்து காணொலி காட்சி மூலம் ஆலோசனை நடத்தினர்.

வாக்கு எண்ணிக்கை நடைபெறும் மையங்களில் பாதுகாக்கபட்டு வரும் மின்னணு வாக்கு இயந்திரங்கள் மற்றும் வாக்கினை சரிபார்க்கும் இயந்திரங்கள் (VVPAT) ஆகியவை வைக்கப்பட்டிருக்கும் அறைகள் மூன்றடுக்கு முறையில் 24 மணிநேரமும் பாதுகாக்கபட வேண்டும் எனவும் வாக்கு எண்ணிக்கை மையங்களில் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் இடங்கள் (Halls) போதிய வசதி செய்யப்பட்டிருக்க வேண்டும் எனவும் ஊடக மையம் (Media centre) பொது தகவல் அறைகளும் (Public Communication Room) அமைக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும் தீயணைப்பு வசதி செய்யப்பட்டிருக்க வேண்டும் எனவும் மையங்களில் தடையில்லா மின்சார வசதி ஜெனரேட்டர் வசதி ஆகியவையும் செய்யப்பட்டிருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

வாக்கு எண்ணிக்கை மையங்களில் மின்னணு வாக்கு இயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள அறைகளின் (Strong Room) பக்கம் யாரும் நுழையாத வண்ணம் ஆங்காங்கே Barricade போடவேண்டும் எனவும் அந்த பகுதிக்கு முக்கிய பிரமுகர் யாரேனும் வர நேர்ந்தால் அவர்களுடைய கையெழுத்தை அங்கே வைக்கப்பட்டிருக்கும் பதிவு புத்தகத்தில் எழுத வேண்டுமெனவும் ஆலோசனை கூறப்பட்டது.

மேலும் வாக்கு எண்ணிக்கையை மேற்கொள்ளும் அலுவலர்களுக்கு பயிற்சியும் வாக்கு எண்ணிக்கை மேற்கொள்ள என்னென்ன பொருட்களை வைத்துக்கொள்ள வேண்டும் என்பது பற்றியும் அறிவுறுத்தப்பட்டது.

பறக்கும் படைகள், நிலை கண்காணிப்பு குழுக்கள் ஆகியவை, நடைபெற உள்ள 4 சட்டமன்ற இடைத் தேர்தலுக்காக எவ்வாறு உருவாக்கப்பட வேண்டும் என்பது குறித்தும் விரிவாக கூறப்பட்டது.

மேலும் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் மையங்களிலும் அதனை சுற்றியுள்ள பகுதிகள் அனைத்திற்கும் போதிய பாதுகாப்பு வசதி செய்து கொடுப்பது பற்றியும் மின்னணு வாக்கு இயந்திரங்கள் வாக்கினை சரிபார்க்கும் இயந்திரங்களையும் பாதுகாக்கப்பட்டு வரும் அறைகளின் சாவிகளை பத்திரமாக பாதுகாப்பது குறித்தும் கூட்டத்தில் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

இந்த காணொலி காட்சி கூட்டத்தில், சென்னையில், காவல்துறை தேர்தல் ஒருங்கிணைப்பாளர்கள் திரு. ஜெயராமன் இ.கா.ப, திரு. சேஷசாய் இ.கா.ப. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் திரு. பிரசாந்த் எம். வடநரே இ.ஆ.ப கூடுதல் தலைமை தேர்தல் அதிகாரி திரு. V. ராஜாராமன் இ.ஆ.ப இணை தலைமைத் தேர்தல் அதிகாரிகள், திரு. தீபக் ஜேக்கப் இ.ஆ.ப, திரு. வே. மணிகண்டன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாவட்டங்களில், மாவட்ட தேர்தல் அலுவலர்கள், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள், மாவட்ட காவல்துறை ஆணையர்கள் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் ஆகியோர் காணொலி காட்சி மூலம் போதிய ஆலோசனைகளை பெற்றுக்கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**